என்
கால்களுக்கு
தீபம்
Lamp to My Feet
வேதம்

Song 2 என் கால்களுக்கு தீபம்

119 சங்கீதம் - நூன் (105-112)

Psalm 119:105-112 (Nun) – God's Word is a lamp to our feet and light to our path. It gives direction in darkness and strength in affliction.

என் கால்களுக்கு தீபம் உம் வசனம் - கர்த்தரே
என் பாதைக்கு வெளிச்சம் உம் வசனம்

வசனம் கர்த்தரின் வசனம்
உலகத்திற்கு ஒளியும் வெளிச்சமும்

உம்முடைய நீதிநியாயங்களை காத்து நடப்பேன் என்று
ஆணையிட்டேன் அதை நிறைவேற்றுவேன்

என் கால்களுக்கு தீபம் உம் வசனம் - கர்த்தரே
என் பாதைக்கு வெளிச்சம் உம் வசனம்

நான் உபத்திரவப்பட்டு சாகக்கிடக்கிறேன்
உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்பியும்

வசனம் கர்த்தரின் வசனம்
உலகத்திற்கு ஒளியும் வெளிச்சமும்

என் வாயின் உற்சாக பலிகளை அங்கீகரித்து
உமது நியாயங்களை எனக்குப் போதித்தருளும்

என் கால்களுக்கு தீபம் உம் வசனம் - கர்த்தரே
என் பாதைக்கு வெளிச்சம் உம் வசனம்

துன்மார்க்கர் எனக்கு கண்ணி வைக்கின்றனர் - நானோ
உம்முடைய கட்டளைகளை விட்டு வழி தவறேன்

வசனம் கர்த்தரின் வசனம்
உலகத்திற்கு ஒளியும் வெளிச்சமும்

உம்முடைய சாட்சிகளை எனக்கு நித்தியமாக்கினேன்
உம் பிரமாணங்களின்படி செய்ய என் இருதயத்தை சாய்த்தேன்

என் கால்களுக்கு தீபம் உம் வசனம் - கர்த்தரே
என் பாதைக்கு வெளிச்சம் உம் வசனம்

ஆராதனை..... ஆராதனை
ஆராதனை..... கர்த்தருக்குத்தான்
ஆராதனை..... ஆராதனை
ஆராதனை..... தேவனுக்குத்தான்

வேத விளக்கு
THE BIBLE LAMP
யோவான் 8:12 | John 8:12